**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.226/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு. பாபு |
| Husband/Father Name | முனுசாமி |
| Village /Area | கல்வாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | டாஸ்மாக் கடை உதவியாளர் |
| Age | 45 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் புன்னையிலுள்ள டாஸ்மாக் கடையில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா.1 மேற்படி கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறார். 30.01.2024 அன்று நான் கடையில் இருந்து பாத்ரூம் செல்வதற்காக வெளியே சென்ற போது 2 நபர்கள் கடையின் உள்ளே சென்று பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே ஓடி வந்தார்கள். பணத்தை எடுத்து கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் யார் என்று தெரியவில்லை. சம்பவ நேரம் இரவு நேரம் என்பதால் யார் என்று தெரியவில்லை. இது சம்பந்தமா பானாவரம் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் 1. 2, 4 தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் இரவு நேரம் என்பதால் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை நான் பார்க்கவில்லை. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் ஆஜர் எதிரிகளை

நான் பார்க்கவில்லை. மேற்கொண்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**<u>எதிரிகள் 3. 5 மற்றும் 6 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ தினத்தன்று சம்பவம் நடந்த பிறகு அசா.1 கடையின் கதவை பூட்டிக்கொண்டு சென்றாறா என்றால் ஆமாம். சிறுநீர் கழித்துவிட்டு 10 நிமிடம் கழித்து கடைக்கு வந்தேன். பிறகு நான் கடையினுடைய பின் பக்கம் சென்றேன்.

**(ஒம்./-) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**